# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 263/2021

2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 06 ம் நாள் சனிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சந்தீப் குமார் | | |
| த/பெ. | ஹரி சிங் | வட்டம் | ஷிகர் |
| கிராமம் | ஜஹீகர் ச ேஹாதி | வயது | 32 |
| தொழில் | விவசாய வேலை தற்போது ஓய்வு | மாவட்டம் | ஷிகர் (ராஜஸ்தான்) |

**முதல் விசாரணை**

சாட்சிக்கு தமிழ் தெரியாது என்பதால் அவரிடம் வழக்கறிஞர் திரு. எஸ். நாகேஷ்வர ராவ் என்பவர் மூலம் கேள்விகள் இந்தியில் கேட்கப்பட்டு தமிழில் மொழி பெயர்த்து சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்டது அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 9 வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | வாகன பதிவு சான்று நகல் |
| ம.சா.ஆ 3 | வாகன காப்பீட்டுச் சான்று நகல் |
| ம.சா.ஆ 4 | வாகன ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 5 | மருத்துவ விடுவிப்பு எண்ணிக்கை 2 |
| ம.சா.ஆ 6 | கதிரியக்கப்படம் அசல் |
| ம.சா.ஆ 7 | மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 8 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ 9 | மனுதாரரின் காயத்தின் புகைப்படம் அசல் |
| நி.ம.சா.ஆ.1 | மனுதாரரின் ஊனச் சான்றிதழ் அசல் |

**குறுக்கு விசாரணை.**

22.10.2020 அன்று காலை 7.30 மணியளவில் நான் எனது சகோதரரின் இருசக்கர வாகனம் எண் AP–26–AE–1699 ஐ வாகனத்தை பால் வாங்குவதற்காக பிண்டி பாலம் அருகே ஓட்டிச் சென்ற போது எனக்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்த டிப்பர் லாரி எதிர்பாராத விதமாக திடீரென்று பிரேக் போட்டதால் நான் லாரியின் பின்னால் மோதிவிட்டேன். விபத்தில் எனது வலது காலிலும் தலையில் இடது புறம் காயம் ஏற்பட்டது. முதலுதவிக்காக அரசு மருத்துமனையில் சிகிச்சை பெற்றேன் பின்னர் மேல் சிகிச்சைக்காக சிம்பூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கிருந்து மெடிக்கவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அங்கு 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். வலது கால் பாதத்திலும் இடது தொடையிலும் அறுவை சிகிச்சை செய்தார்கள். அந்த காயங்கள் குணமாகிவிட்டது. ஆனால் என்னால் வேகமாக நடக்கமுடியவில்லை. எனது வயது வருமானம்

குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரைதையால்தான் ஏற்பட்டது என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. இருசக்கர வாகன காப்பீட்டு நிறுவனத்திடமிருந்ததான் நான் இழப்பீடு பெற வேண்டும் என்றால் சரியல்ல. என்னிடம் ஓட்டுநர் உரிமம் உள்ளது.

**மறு விசாரணை இல்லை.**

சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி